


தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிறு, செப்டம்பர் 13, 2026 | இதழ் 153

## மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல். த.வெ.க. தேர்தல் பொறுப்பாளர்கள்: முதலமைச்சர் விஜய் அறிவிப்பு. புதிய வரலாறு படைக்கும் வகையில் அனைவரும் தேர்தல் பணியாற்ற வேண்டுகோள்

சென்னை, 13 செப்டம்பர் 2026: மதுராந்தகம், தாராபுரம் இடைத் தேர்தலை முன்னிட்டு த.வெ.க. தேர்தல் பொறுப்பாளர்கள் பட்டியலை முதலமைச்சர் விஜய் அறிவித்துள்ளார்.

தமிழகத்தில் காலியாக உள்ள 7 சட்டசபை தொகுதிகளில், மதுராந்தகம், தாராபுரம் ஆகிய 2 தொகுதிகளுக்கு மட்டும் அடுத்த மாதம் (அக்டோபர்) 6-ந் தேதி இடைத்தேர்தல் நடைபெற இருக்கிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 9-ந் தேதி தொடங்கியுள்ள நிலையில், இடைத்தேர்தலிலும் த.வெ.க., தி.மு.க., அ.தி.மு.க., நாம் தமிழர் ஆகிய கட்சிகள் இடையே 4 முனைப்போட்டி நிலவுகிறது. இதில், நாம் தமிழர் கட்சியை தவிர, தேர்தல் களம் காணும் 3 கட்சிகளும் வேட்பாளர்களை அறிவித்து விட்டன. கடந்த தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), சத்தியபாமா (தாராபுரம்) ஆகிய 2 பேரும் தற்போது த.வெ.க. சார்பில் அதே தொகுதிகளில் களம் காண்கின்றனர்.

பிரதான எதிர்க் கட்சியான தி.மு.க. சார்பில் ஐ.பரந்தாமன் (மதுராந்தகம்), எஸ். சுகன்யா (தாராபுரம்) ஆகியோர் வேட்பாளர்களாக போட்டியிடுகின்றனர். அ.தி.மு.க. சார்பில் கனிதா சம்பத் (மதுராந்தகம்), பானுமதி (தாராபுரம்) ஆகியோர் போட்டியிடுகின்றனர். நாம் தமிழர் கட்சி, வேட்பாளர்களை நாளை அறிவிக்க உள்ளது. இடைத் தேர்தல் என்ற போதிலும் கடுமையான போட்டி நிலவுவதால், வெற்றி பெற அரசியல் கட்சிகள் பல்வேறு வியூகம் வகுத்து வருகின்றன.

தேர்ல் பொறுப்பாளர்கள்

அந்த வகையில், தவெக தேர்தல் பொறுப்பாளர்களை நியமனம் செய்து அக்கட்சியின் தலைவரும் முதல் அமைச்சருமான விஜய் உத்தரவிட்டுள்ளார்.

அதன் விவரம் வருமாறு

தேர்தல் கண்காணிப்பாளர்கள்: அமைச்சர்கள் என்.ஆனந்த், கே.ஏ.செங்கோட்டையன், நிர்மல் குமார்

மதுராந்தகம்

மதுராந்தகம் (தனி) தொகுதி பொறுப்பாளர்: அமைச்சர் ஆதவ் அர்ஜுனா

இணைப் பொறுப்பாளர்கள்: அமைச்சர்கள் ராஜ்குமார், தென்னரசு, வினோத்

துணைப் பொறுப்பாளர்கள்: எம்.எல்.ஏ.க்கள் சரவணமூர்த்தி; தியாகராஜன், விஜயராஜ், காமாட்சி, பாலாஜி (எ) மணிகண்டன்.

தாராபுரம்

தாராபுரம் பொறுப்பாளர்: அமைச்சர் அருண்ராஜ்

இணைப் பொறுப்பாளர்கள்: அமைச்சர்கள் விஜய் பாலாஜி, விஜயலட்சுமி, லோகேஷ் தமிழ்ச் செல்வன்.

துணைப் பொறுப்பாளர்கள்: பாலமுருகன் எம்.எல்.ஏ. - திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி.

சத்தியபாமா எம்.எல்.ஏ -திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதி

ராம்குமார் எம்.எல்.ஏ, - பல்லடம் சட்டமன்றத் தொகுதி

திலீப் எம்.எல்.ஏ - நாமக்கல் சட்டமன்றத் தொகுதி

சத்யா எம்.எல்.ஏ, - கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதி

புதிய வரலாறு படைப்போம் மேற்கண்ட குழுவினர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில் இடைத்தேர்தல் பணிகளை மேற்கொள்வார்கள். தேர்தல் கண்காணிப்பாளர்கள், இரண்டு தொகுதிகளின் தேர்தல் பணிகளைக் கண்காணிப்பார்கள். அந்தந்தச் சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட கழகத் தோழர்கள் அனைவரும் இவர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

விசில் சின்னம், மீண்டும் வாகை சூட வேண்டும். இடைத் தேர்தல் வரலாற்றிலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர் என்கிற புதிய வரலாறு படைக்கும் வகையில் அனைவரும் தேர்தல் பணியாற்றிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தொகுதிகளில் நம் வெற்றி வேட்பாளர்களுக்கு ஆதரவாக நமது மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளைத் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக விரைவில் முன்னெடுப்போம். இவ்வாறு முதலமைச்சர் கூறியுள்ளார்.

## மேற்காசிய மோதலுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு பாதுகாப்பான கப்பல் போக்குவரத்துக்கு நடவடிக்கை: ஈரான் அதிபரிடம் மோடி வலியுறுத்தல்

சென்னை 13, செப்டம்பர் 2026: மேற்கு ஆசிய மோதலை பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திரம் மூலம் தீர்க்க வேண்டும் என்றும் பாதுகாப்பான கப்பல் போக்குவரத்து மற்றும் மாலுமிகளின் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து ஈரான் அதிபரிடம் பிரதமர் மோடி வலியுறுத்தினார்.

உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள இந்தியா வந்துள்ள ஈரான் அதிபர் மசூத் பெசஸ்கியானுடன் நேற்றிரவு பிரதமர் மோடி பேசினார்.

மேற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள சமீபத்திய நிகழ்வுகள் குறித்து இரு தலைவர்களும் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர். இந்த சந்திப்பின் போது, மேற்காசிய பிராந்தியத்தில் நீடித்த அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கும், கடல்வழிப் போக்குவரத்து மற்றும் வர்த்தக சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும், மாலுமிகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்கும் தொடர்ச்சியான முயற்சிகள் தேவை என்று ஈரான் அதிபரிடம் மோடி வலியுறுத்தினார்.

மேலும் சவாலான சூழ்நிலைகள் இருந்த போதிலும், பிரிக்ஸ் கூட்டங்களில் ஈரான் தொடர்ந்து உயர்மட்ட அளவில் பங்கேற்று



வருவதற்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்தார். உலக தெற்கு நாடுகளில் மீள்திறன், புதுமை, ஒத்துழைப்பு மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றை வளர்ப்பதில் பிரிக்ஸ்-க்கு உள்ள ஆற்றலை அவர் குறிப்பிட்டார்.

## புதுச்சேரி தட்டாஞ்சாவடி இடைத்தேர்தலில் பொதுமக்கள் வாக்களிக்க ஏதுவாக அக்.06ம் தேதி ஊதியத்துடன் கூடிய விடுமுறை நாளாக அறிவிப்பு

சென்னை, 13 செப்டம்பர் 2026: புதுச்சேரி மாவட்டத்தின் தட்டாஞ்சாவடி சட்டமன்ற தொகுதியில் காலியாக உள்ள உறுப்பினர் பதவியை நிரப்புவதற்கான இடைத்தேர்தல் அட்டவணையை இந்திய தேர்தல் ஆணையம் 07.09.2026 (திங்கட்கிழமை) அன்று வெளியிட்டுள்ளது. இதன்படி, வருகின்ற 06.10.2026 அன்று நடைபெறவுள்ள இடைத்தேர்தலை முன்னிட்டு, வாக்காளர்கள் தங்களது வாக்குரிமையைச் சுதந்திரமாகவும் தவறாமல் பயன்படுத்துவதற்கு ஏதுவாக, வாக்குப்பதிவு நாளான 06.10.2026 (செவ்வாய்க்கிழமை) அன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறை நாளாக அறிவிக்கப்படுகிறது.

* தேர்தல் நாளன்று தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளித்தல்:-

வாணிபம், வியாபாரம். தொழில் நிறுவனங்கள் அல்லது பிற நிறுவனங்களில் பணிபுரியும் ஒவ்வொரு நபர்களுக்கும் மக்களவை அல்லது சட்டப்பேரவைக்கு நடைபெறும் தேர்தல்களில் வாக்களிக்க உரிமை பெற்றவராக இருப்பின் அவர்களுக்கு ஒரு நாள் விடுமுறை அளிக்கப்படுதல் வேண்டும். விடுமுறை அளிக்கப்பட்ட நபருக்கு சம்பள பிடித்தமோ அல்லது சம்பள குறைப்போ செய்தல் கூடாது மேலும் பணிபுரியும் நபர் அந்த நாளுக்கான சம்பளம் பெறாதவராக பணியமர்த்தப்பட்டிருந்தாலும் கூட அவருக்கும் சம்பளம் வழங்க வேண்டும்



இதன்படி, மேற்கண்ட இடைத்தேர்தல் நடைபெறும் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களில் பணிபுரியும் தட்டாஞ்சாவடி தொகுதியை சார்ந்த வாக்காளர்களுக்கு, 06.10.2026 அன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்பட வேண்டும். 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 135பி பிரிவின் கீழ் இந்த விடுமுறை காரணமாக எந்தவொரு பணியாளரின் ஊதியத்திலும் எந்தவிதக் பிடித்தமும் செய்யக்கூடாது.

மேலும், தினக்கூலி மற்றும் தற்காலிகத் தொழிலாளர்கள், சுழற்சி முறையில் பணிபுரிபவர்கள் உள்ளிட்ட தகுதியுடைய அனைத்து வாக்காளர்களுக்கும் இவ்விதிமுறை பொருந்தும். மேலும், தேர்தல் நடைபெறும் தட்டாஞ்சாவடி தொகுதியை சேர்ந்த வாக்காளர்கள் வேறு தொகுதியில் பணிபுரிந்தாலும், அவர்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக, இச்சட்ட விதிகளின்படி உரிய விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

இது சம்பந்தமாக ஏதேனும் விதிமீறல் இருக்குமேயானால் சட்டப்பிரிவு தண்டனைக்குரிய குற்றமாகும்

## உக்ரைனில் ஐரோப்பிய படைகள்: ரஷ்யா உடன் போருக்கு வழிவகுக்கும். அதிபர் புதின் எச்சரிக்கை

சென்னை 13, செப்டம்பர் 2026: உக்ரைனில் ஐரோப்பிய படைகள் நிலை நிறுத்தப்படுவது ரஷ்யா உடனான போருக்கு வழிவகுக்கும் என ரஷ்ய அதிபர் விளாதிமீர் புதின் எச்சரிக்கை விடுத்துள்ளார். டெல்லியில் நடைபெறும் 18வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டில், ரஷ்ய அதிபர் விளாதிமீர் புதின் பங்கேற்றுள்ளார். இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக பிரதமர் மோடி உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்களை அவர் சந்தித்து உரையாடி வருகிறார். இந்த நிலையில் இன்று செய்தியாளர்களுடன் பேசிய அதிபர் புதின், ஐரோப்பிய நாடுகள் உடன் மோதல்களை விரும்பவில்லை என்றும், ஆனால் உக்ரைனில் ஐரோப்பிய படைகள் நிலை நிறுத்தப்படுவது ரஷ்யா உடனான போருக்கு வழிவகுக்கும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதுபற்றி செய்தியாளர்களுடன் அவர் பேசியதாவது: "நாங்கள் (ரஷ்யா) ஐரோப்பிய நாடுகளை அச்சுறுத்தவில்லை. இனி அச்சுறுத்தவும் போவதில்லை. நாங்கள் ஏன் அவ்வாறு செய்ய வேண்டும்? ஐரோப்பிய நாடுகளுடன் மோதல்களைத் தொடங்க எங்களுக்கு எந்தவொரு காரணமும் இல்லை என்பதை யாரும் கருத்தில் எடுத்துக் கொள்வதாகத் தெரியவில்லை. ஆனால், இப்போது அவர்கள் (ஐரோப்பிய நாடுகள்)



உக்ரைனில் தங்களின் படைகளை நிலை நிறுத்துவது குறித்து சிந்திப்பதாகக் கூறுகின்றனர். இதன் பொருள் ரஷ்யா உடன் போர் என்பதாகும்" எனக் கூறியுள்ளார். முன்னதாக உக்ரைன் மீது கடந்த 2022ம் ஆண்டு முதல் ரஷ்யா தொடுத்துள்ள போரில், ஏராளமான ஐரோப்பிய நாடுகள் தொடர்ந்து உக்ரைனுக்கு ஆதரவு அளித்து வருகின்றன. மேலும் இந்தப் போரில் இருதரப்புக்கும் இடையே மத்தியஸ்தராகச் செயல்படுவதாக அமெரிக்க அரசு கூறிவருவது குறிப்பிடத்தக்கது.



தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
ஞாயிறு,
செப்டம்பர் 13, 2026

## நேஷ்னல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிவீடெட் நிறுவனத்தின் ஆரம்பப் பொது பங்கு வெளியீடு (ஐபிஓ) 17 செப்டம்பர் 2026 அன்று தொடக்கம்; ஒவ்வொரு ஈக்விட்டி பங்கின் முணுமதிப்பு ரூ.1 ஆக இருக்கும் நிலையில், விலைப்பட்டை ரூ.1,700 - ரூ.1,785 என நிர்ணயம்

மும்பை 13, செப்டம்பர் 2026: நேஷ்னல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் நிறுவனம் தனது ஆரம்பப் பொது பங்கு வெளியீட்டிற்காக (ஐபிஓ), முகமதிப்பு ரூ.1 கொண்ட ஒவ்வொரு ஈக்விட்டி பங்கிற்கும் ரூ.1,700/- முதல் ரூ.1,785/- வரையிலான விலைப்பட்டையை நிர்ணயித்துள்ளது.

நிறுவனத்தின் ஆரம்பப் பொது பங்கு வெளியீடு ("ஐபிஓ" அல்லது "ஆஃபர்") 17 செப்டம்பர் 2026 அன்று சந்தா செலுத்துவதற்காகத் திறக்கப்பட்டு, 21 செப்டம்பர் 2026 அன்று நிறைவடையும்.

முதலீட்டாளர்கள் குறைந்தபட்சம் 8 ஈக்விட்டி பங்குகளுக்கு ஏலம் செய்யலாம். அதன்பிறகு 8 ஈக்விட்டி பங்குகளின் மடங்குகளில் ஏலம் செய்யலாம்.

தற்போதைய நிலவரப்படி, தலா ரூ.1 முகமதிப்பு கொண்ட 2,475,000,000 ஈக்விட்டி பங்குகள் நிலுவையில் உள்ளன.

முகமதிப்பு ரூ.1 கொண்ட இந்த ஐபிஓ, நிறுவனத்தின் பங்குதாரர்களான State Bank of India, Canada Pension Plan Investment Board, Aranda Investments (Mauritius) Pte Ltd, MS Strategic (Mauritius) Ltd, The New India Assurance Company Ltd, SBI Capital Markets Limited (SS), Bank of Baroda, Stock Holding Corporation of India Limited, General Insurance Corporation of India Limited மற்றும் United India Insurance Company Limited ஆகிய நிறுவனங்கள் விற்பனை செய்யும் அதிகபட்சம் 126,436,650 ஈக்விட்டி பங்குகளை உள்ளடக்கிய ஆஃபர்-ஃபார்-சேல் ஆகும்.

எஸ்இபிஐ ஐசிடிஆர் ரெகுலேஷன்ஸ்-க்கு இணங்க, புக்-பில்டிங் முறையின் மூலம் இந்த வெளியீடு மேற்கொள்ளப்படுகிறது. இதில் குவாலிஃபைட்




இன்ஸ்டிடியூஷனல் பையர்ஸ் (க்யூஐபி)-க்கு அதிகபட்சம் 50% வரையும், நான்-இன்ஸ்டிடியூஷனல் இன்வெஸ்டர்ஸ் (என்ஐஐ)-க்கு குறைந்தபட்சம் 15% வரையும், Retail Individual Investors (RIIs)-க்கு குறைந்த பட்சம் 35% வரையும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நேஷ்னல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா (என்எஸ்இ) 1994ஆம் ஆண்டு தனது செயல்பாடுகளைத் தொடங்கியது. இந்தியாவில் மின்னணு அல்லது திரை அடிப்படையிலான வர்த்தக முறையை அறிமுகப்படுத்திய முதல் பங்குச் சந்தையாக என்எஸ்இ திகழ்கிறது. என்எஸ்இ-யின் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட வணிக மாதிரியில் எக்ஸ்சேஞ்ச் லிஸ்ட்டிங், வர்த்தக சேவைகள், கிளியரிங் மற்றும் செட்டில்மென்ட் சேவைகள், குறியீடுகள் மற்றும் சந்தைத் தரவு சேவைகள் ஆகியவை அடங்கும். எஸ்இபிஐ மற்றும் எக்ஸ்சேஞ்சின் விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் வர்த்தக உறுப்பினர்கள், கிளியரிங் உறுப்பினர்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் இணங்குவதை என்எஸ்இ மேற்பார்வையிடுகிறது. தொழில்நுட்பத் துறையில் முன்னோடியாக விளங்கும் என்எஸ்இ, புதுமை மற்றும் தொழில்நுட்பத்தில் முதலீடு செய்வதை அடிப்படையாகக் கொண்ட செயல்பாட்டு கலாச்சாரத்தின் மூலம் தனது அமைப்புகளின் நம்பகத்தன்மை மற்றும் செயல்திறனை உறுதி செய்கிறது.

## 5 மாதங்களுக்கு பிறகு: வைகை அணை நீர்மட்டம் 40 அடியை எட்டியது

சென்னை 13, செப்டம்பர் 2026: 5 மாதங்களுக்கு பிறகு வைகை அணை நீர் மட்டம் 40 அடியை எட்டியுள்ளது. தேனி மாவட்டம் உள்ளிட்ட 5 மாவட்டங்களின் விவசாயம் மற்றும் குடிநீர் ஆதாரமாக விளங்குகிறது 71 அடி உயரமுள்ள வைகை அணை. இம்முறை தென்மேற்கு பருவமழை போதிய அளவில் பெய்யாததால், மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் கடுமையாக சரிந்தது.

குறிப்பாக வைகை அணையின் நீர்மட்டம் கடந்த மே மாத இறுதியில் 20 அடியாகக் குறைந்ததால், அணையை நம்பி செயல்படுத்தப்பட்டு வரும் பல கூட்டுக் குடிநீர் திட்டங்கள் முடங்கும் நிலை ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து, பெரியாறு அணையில் இருந்து வைகை அணைக்குக் குறைந்த அளவில் தண்ணீர் திறக்கப்பட்டது. கடந்த 80 நாட்களாக பெரியாறு அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீரின் மூலம், வைகை அணையின் நீர்மட்டம் மெல்ல மெல்ல உயரத் தொடங்கியது. கடந்த மார்ச் 5ம் தேதி 40 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், அதன்பின் சரிவைச் சந்தித்தது. தற்போது பெரியாறு அணை நீரின் தொடர் வரத்தால், சுமார் 5 மாதங்களுக்குப் பிறகு மீண்டும் 40 அடியை எட்டியுள்ளது.

செப். 11 காலை நிலவரப்படி, வைகை அணையின் நீர்மட்டம் 39.67 அடியாகப் பதிவாகியுள்ளது. அணைக்கு வினாடிக்கு 260 கனஅடி நீர் வரத்து உள்ள நிலையில், குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 86 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. அணையின் மொத்த கொள்ளளவான 6,091 மில்லியன் கனஅடியில் தற்போது 921 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பில் உள்ளது.

அணையின் சிர் மட்டம் உயர்ந்து வந்த போதிலும், வழக்கமாக ஜூன் மாதம் திறக்கப்படும் முதல் போக பாசனத்திற்கான தண்ணீர் இதுவரை திறக்கப்படவில்லை. நடப்பு பருவத்தில் முதல் போக பாசனத்திற்குத் தண்ணீர் திறக்க வாய்ப்பில்லை எனக் கூறப்படுகிறது. தற்போது அணையில் உள்ள நீர் முழுமையாகக் குடிநீர் திட்டங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அடுத்த மாதம் (அக்டோபர்) தொடங்கவுள்ள வடகிழக்கு பருவமழை கை கொடுத்து, அணைக்கு அபரிமிதமான நீர் வரத்து கிடைத்தால் மட்டுமே ஒரு போக பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட வாய்ப்புள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இருப்பினும், சுட்டெரித்த கோடைக்குப் பின் 5 மாதங்கள் கழித்து வைகை அணை நீர்மட்டம் 40 அடியை எட்டியுள்ளது அப்பகுதி விவசாயிகளிடையேயும் பொதுமக்களிடையேயும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## நடிகர் ஆர். மாதவன் நடிப்பில் உருவான 'ஜி.டி.என்.' திரைப்படம் நெட்ஃபிளிக்ஸ் உலகளாவிய டாப் 10 திரைப்படங்களின் பட்டியலில் இடம் பிடித்தது!

சென்னை 13, செப்டம்பர் 2026: இன்றைய நவீன சூழலில், ஒரு திரைப் படத்தின் ஆயுட்காலம் என்பது இனி திரையரங்குகளில் அது ஓடும் காலத்தால் மட்டுமே நிர்ணயிக்கப்படுவதில்லை. இதற்கு சிறந்த உதாரணமாக, பழம்பெரும் இந்திய கண்டுபிடிப்பாளரும் தொழிலதிபருமான ஜி.டி. நாயுடுவின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படமான 'ஜி.டி.என்.' அமைந்துள்ளது. திரையரங்குகளில் வரவேற்பைப் பெற்ற இப்படம், தற்போது சர்வதேச அளவில் ஓடிடி தளத்தில் பெரும் வரவேற்பைப் பெற்ற திரைப்படமாக மாறியுள்ளது.

ஆர். மாதவன் முன்னணி கதாபாத்திரத்தில் நடித்திருக்க நடிகர்கள் சத்யராஜ், ஜெயராம், பிரியாமணி, துஷாரா விஜயன் உள்ளிட்ட பலரும் இப்படத்தில் நடித்துள்ளனர். கடந்த ஆகஸ்ட் 7ஆம் தேதி திரையரங்குகளில் வெளியான 'ஜி.டி.என்.' திரைப்படம், விமர்சகர்களின் பாராட்டுகளாலும், 'இந்தியாவின் எடிசன்' என்று போற்றப்படும் ஜி.டி. நாயுடுவாக மாதவனின் சிறப்பான நடிப்பைப் பாராட்டிய ரசிகர்களின் வாய்மொழிப் பரிந்துரைகளாலும் நான்கு வாரங்கள் திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடியது.

ஜி.டி. நாயுடுவின் காலத்திற்கே ரசிகர்களை அழைத்து சென்ற படத்தின் விரிவான காலக்கட்டமும் பின்னணியும், காலனித்துவ ஆட்சிக் காலத்தில் உள்நாட்டுத் தொழில்நுட்பத்தை உருவாக்குவதற்காக தடைகளை எதிர்த்து நின்ற ஜி.டி. நாயுடுவின் துணிச்சலான செயல்பாடுகளும் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தன.

செப்டம்பர் 4ஆம் தேதி இந்த திரைப்படம் நெட்ஃபிளிக்ஸ் ஓடிடி தளத்தில் வெளியான போது, வர்த்தக ரீதியிலான இதன் இரண்டாவது அத்தியாயம் தொடங்கியது. பல்வேறு பிராந்திய மொழிகளில் ஓடிடியில் வெளியிடப்பட்ட ஒரு வாரத்திற்குள், திரையரங்குகளில் படத்திற்குக் கிடைத்த ரசிகர்களின் ஆதரவு டிஜிட்டல் திரைகளிலும் பல மடங்கு அதிகரித்தது. தொடர்ந்து கிடைத்த வாய்மொழிப் பாராட்டுகளால், இப்படம் இந்தியாவில் அதிகம் டிரெண்டாகும் திரைப் படங்களின் பட்டியலில் டாப் 2 இடங்களுக்குள் முன்னேறியது. இதன் மூலம் நெட்ஃபிளிக்ஸ் தளத்தில் அதிகம் பேசப்படும் திரைப்படங்களில் ஒன்றாக 'ஜி.டி.என்.' மாறியது.



இந்த வெற்றி இந்திய எல்லைகளுடன் நின்றுவிடவில்லை. 'ஜி.டி.என்.' திரைப்படம் நெட்ஃபிளிக்ஸ் உலகளாவிய டாப் 10 திரைப்படங்களின் பட்டியலிலும் இடம் பிடித்துள்ளது. ெ'ளி நாடுகளில் வசிக்கும் இந்தியர்களிடமும், உலகெங்கிலும் உள்ள திரைப்பட ரசிகர்களிடமும் இப்படம் சிறப்பான வரவேற்பைப் பெற்று வருகிறது.

தற்போது ஐக்கிய அரபு அமீரகம், இலங்கை, சிங்கப்பூர், பாகிஸ்தான் மற்றும் பஹ்ரைன் உள்ளிட்ட பல நாடுகளில் டாப் 5 தரவரிசைக்குள் இப்படம் இடம் பெற்றுள்ளது.

தொழில்துறை ஆய்வாளர்களின் கருத்துப்படி, வாழ்க்கை வரலாற்றை மையமாகக் கொண்ட, வலுவான கதைக்களம் கொண்ட இந்தியத் திரைப்படங்கள் ஸ்ட்ரீமிங் தளங்கள் மூலம் உலகளாவிய ரசிகர்களைச் சென்றடைய முடியும் என்பதற்கு 'ஜி.டி.என்.' ஒரு சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது என்கின்றனர்.

வலுவான விமர்சனங்கள் இப்படத்திற்கு திரையரங்குகளில் சிறப்பான தொடக்கத்தை வழங்கிய நிலையில், நெட்ஃபிளிக்ஸில் கிடைத்த அபாரமான வரவேற்பு, டிஜிட்டல் தளங்கள் நல்ல கதைகளுக்கு இரண்டாவது வாய்ப்பை மட்டுமல்லாமல், பல நேரங்களில் மிகப் பெரிய உலகளாவிய மேடையையும் வழங்குகின்றன என்பதை எடுத்துக் காட்டுகிறது.

## ஹவுதிகள் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா மறுப்பு: சவுதி இளவரசர் கோரிக்கையை நிராகரித்தார் டிரம்ப்

சென்னை 13, செப்டம்பர் 2026: ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்கா நேரடி ராணுவத் தாக்குதல் நடத்த வேண்டும் என்று சவுதி அரேபிய பட்டத்து இளவரசர் விடுத்த கோரிக்கையை அமெரிக்க அதிபர் டிரம்ப் நிராகரித்து விட்டார்.

ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி அமைப்பினரின் நடவடிக்கைகள் தீவிரமடைந்து வருவதால் சவுதி அரேபியா கவலை அடைந்துள்ளது. குறிப்பாக செங்கடல் மற்றும் பாப் அல்-மண்டப் கடல்வழிப் பாதையில் கப்பல் போக்குவரத்துக்கு ஹவுதிகளால் ஏற்படும் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், அமெரிக்க அதிபர் டிரம்பை சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் இருமுறை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, ஹவுதிகளுக்கு எதிராக உடனடியாக அமெரிக்க ராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாக தெரிகிறது. ஆனால், அவரது கோரிக்கையை அதிபர் டிரம்ப் நிராகரித்துவிட்டார்.

ஹவுதிகளுக்கு எதிராக அமெரிக்கா நேரடியாக ராணுவ நடவடிக்கையில் ஈடுபட தற்போதைக்கு திட்டமிடவில்லை என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதற்கு பதிலாக சவுதி அரேபியாவுக்கு அமெரிக்காவின் ஆதரவை அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.



அமெரிக்க மத்திய கிழக்கு ராணுவப் படைப்பிரிவின் தளபதி அட்மிரல் பிராட் கூப்பர், அவசர ஆலோசனைகளுக்காக சவுதி அரேபியா சென்றுள்ளார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



## ‘என்ன விலை’ திரைப்படத்தில் மணிமேகலை கதாபாத்திரத்தில் நடித்தது சவாலான அனுபவம்...நடிகை ஷாஷா சிவகுமார்!

சென்னை 13, செப்டம்பர் 2026: பல்வேறு கதாபாத்திரங்களில் தொடர்ந்து தனது திறமையை வெளிப்படுத்தி வரும் நடிகை ஷாஷா சிவகுமார், சஜீவ் பழூர் எழுதி இயக்கியுள்ள ‘என்ன விலை’ திரைப்படத்தில் முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இந்தப் படத்தில் அவர் முதன்முறையாக கிராமப்புறப் பெண்ணான மணிமேகலை கதாபாத்திரத்தில் நடித்திருப்பது அவருக்கு முற்றிலும் புதிய அனுபவமாக அமைந்துள்ளது.

செப்டம்பர் 17ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ள இந்தப் படத்தில் நடிப்பதற்காக, படப்பிடிப்புத் தளத்திற்குச் செல்வதற்கு முன்பே அந்த கதாபாத்திரத்திற்காக தன்னை தயார்படுத்திக் கொண்டதாக ஷாஷா சிவகுமார் தெரிவித்துள்ளார். மேலும், முற்றிலும் மாறுபட்ட புதிய சூழலில் பணிபுரிவதற்கான வாய்ப்பையும் இந்தப் படம் தனக்கு கொடுத்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

‘என்ன விலை’ திரைப்படத்தில் தனது கதாபாத்திரம் குறித்து ஷாஷா சிவகுமார் பகிர்ந்து கொண்டதாவது, “மணிமேகலை எனக்கு மிகவும் சிறப்பான கதாபாத்திரம். ஏனெனில், நான் முதன் முறையாக ஒரு கிராமப்புறப் பெண்ணாக நடித்திருக்கிறேன். படப்பிடிப்புத் தளத்திற்குச் செல்வதற்கு முன்பே இந்தக் கதாபாத்திரத்திற்காக என்னை தயார்படுத்திக் கொண்டேன். அது அந்த கதாபாத்திரத்தை நன்றாகப் புரிந்து கொண்டு அணுக எனக்கு உதவியது. இது எனக்கு முற்றிலும் மாறுபட்ட அனுபவமாக இருந்தது. ‘என்ன விலை’ படம் மூலம் இப்படிப்பட்ட வாய்ப்பு கிடைத்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்” என்றார்.

மேலும், கருணாஸ் மற்றும் நிமிஷா சஜயனுடன் இணைந்து பணியாற்றிய அனுபவம் குறித்தும் ஷாஷா சிவகுமார் பகிர்ந்துள்ளார். அவர்களின் திறமை மற்றும் பணியின் மீதான அர்ப்பணிப்பு காரணமாக, அவர்களுடன் இணைந்து நடிப்பது தனக்கு கூடுதல் பொறுப்புணர்வை கொடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் பகிர்ந்து கொண்டதாவது, “கருணாஸ் சார் ஒரு அற்புதமான நடிகர். நிமிஷா மிகவும் திறமையானவர், கடினமாக உழைப்பவர். அவர்களைப் போன்ற நடிகர்களுடன் இணைந்து நடிக்கும்போது இயல்பாகவே நமக்கும் பொறுப்புணர்வு வந்துவிடும். இயக்குநர் சஜீவ் சார் படப்பிடிப்புத் தளத்தில் அனைவரிடமும் எப்போதும் மிகவும் பொறுமையாகவும் மரியாதையுடனும் நடந்து கொண்டார். மேலும், மலையாளத் திரையுலகை சேர்ந்தவர்களுடன் நான் முதன் முறையாக பணியாற்றியுள்ளேன். எனவே, இது எனக்கு முற்றிலும் வித்தியாசமான மற்றும் கற்றல் அனுபவமாக இருந்தது" என்றார்.



சமூக முக்கியத்துவம் வாய்ந்த பின்னணியில் உருவாகியுள்ள ‘என்ன விலை’, ராமேஸ்வரம் அருகே கடலில் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தும் நாணயங்களை மீட்டெடுத்து வாழும் ஒருவரின் கதையை மையமாகக் கொண்டது. கண்ணியத்துடனும் வாழ்வாதாரத்துக்காகவும் அவர் நடத்தும் போராட்டம், இறுதியில் ஒரு முக்கியமான சட்டப் போராட்டத்திற்கு வழிவகுக்கிறது.

இந்தப் படத்தில் கருணாஸ், நிமிஷா சஜயன், ஷாஷா சிவகுமார், விஜயலட்சுமி வீரமணி, சித்தா தர்ஷன், பூர்ணிமா பாக்யராஜ், ஒய்.ஜி. மகேந்திரன், மொட்ட ராஜேந்திரன், நிழல்கள் ரவி, பிரவீணா, மோகன் ராம், சேத்தன் குமார், கவிதாலயா கிருஷ்ணன், கமலேஷ், கோலி சோடா பாண்டி, ஜே.எஸ். கவி, சுவாமிநாதன், தீபா சங்கர், கவி நக்கலைட்ஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

சஜீவ் பழூர் எழுதி இயக்கியுள்ள இந்தப் படத்தை கலாமயா ஃபிலிம்ஸ் நிறுவனத்தின் சார்பில் ஜிதேஷ் வி தயாரித்துள்ளார். படத்தின் இசையை சாம் சி.எஸ். அமைத்துள்ளார். ஒளிப்பதிவை ஆல்பி ஆண்டனி மேற்கொண்டுள்ளார். படத்தொகுப்பை ஸ்ரீஜித் சாரங் கவனித்துள்ளார். சமூக முக்கியத்துவம் வாய்ந்த கதைக்களம் மற்றும் திறமையான நடிகர்களுடன் உருவாகியுள்ள ‘என்ன விலை’ திரைப்படம் உலகம் முழுவதும் செப்டம்பர் 17 அன்று திரையரங்குகளில் வெளியாகிறது.

## இளம் சாம்பியன்களுக்கு மகுடம் சூட்டிய ‘சென்னை கால்பந்து லீக் சீசன் 6’

சென்னை 13, செப்டம்பர் 2026: சென்னை முழுவதும் உள்ள 34 அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 750-க்கும் மேற்பட்ட இளம் கால்பந்து வீரர்களை ஒன்றிணைத்த லேட்டண்ட் வியூ அனலிட்டிக்ஸ் நிறுவனத்தின் ‘சென்னை கால்பந்து லீக்’ சீசன் 6, இன்று ஷெனாய் நகரில் உள்ள பாவேந்தர் பாரதிதாசன் விளையாட்டு மைதானத்தில் உற்சாகமாக நிறைவடைந்தது.

ஒரு வாரம் நடைபெற்ற 13 வயதிற்கு உட்பட்டோருக்கான இந்தத் தொடரில், சிறுவர் மற்றும் சிறுமியர் பிரிவுகளில் மொத்தம் 53 அணிகள் போட்டியிட்டன. இந்தத் தொடர் இன்று ஒரு விறுவிறுப்பான இறுதிப் போட்டியோடு இனிதே முடிவடைந்தது.

இந்த நிறைவு விழாவில் முன்னாள் இந்திய கால்பந்து வீராங்கனை அதிதி சௌஹான் மற்றும் ஐஎஸ்எல் கால்பந்து வீரர் எச். எட்வின் சிட்னி வன்ஸ்பால் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு, சீசன் 6-ன் இறுதிப் போட்டிகளைக் கண்டு ரசித்ததோடு இளம் வீரர்களை உற்சாகப்படுத்தினர்.

Season 6 Winners:

Boys: Govt Higher Secondary School, Manali scored 3 goals

Runners-up: Chennai Middle School, Milk Colony scored 1 goal

Girls: Govt Model Higher secondary school Arumbakkam scored 1 goal

Runners-up: Chennai Higher Secondary School, Washermanpet

இறுதிப் போட்டியின் போது லேட்டண்ட்வியூ நிறுவனத்தின் இணை நிறுவனர் பிரமத் ஐந்தியாலா பேசுகையில், குழந்தைகள் இடையே விளையாட்டு திறமையை வளர்ப்பதே ‘சென்னை கால்பந்து லீக்’கின் முக்கிய நோக்கம் ஆகும்.




அந்த வகையில் “இந்த ஆண்டும் ‘சென்னை கால்பந்து லீக்கில் இருந்து சிறந்த திறமையுள்ள புதிய வீரர்கள் உருவாவதைப் பார்க்க மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இவர்களின் விளையாட்டுப் பயணத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல, எங்கள் பிராந்திய மேம்பாட்டு மையத்தின் ஒரு பகுதியாக, தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு ‘சென்னையின் எப்சி’ பயிற்சியாளர்கள் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குப் பயிற்சி அளிப்பார்கள்.

மாணவர்களிடம் உள்ள விளையாட்டு ஆர்வத்திற்கும், அவர்கள் தொழில்முறை வீரர்களாக மாறுவதற்கான பாதைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பது எங்கள் சிறு முயற்சியாகும். மைதானத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மாணவர்கள் பெரிய அளவில் சிந்திக்க அவர்களை ஊக்கப்படுத்தும் ஒரு சிறந்த சூழலை உருவாக்குவதே எங்கள் நோக்கம்” என்று அவர் கூறினார்.

## 148வது பிறந்த நாளை முன்னிட்டு வரும் 17ம் தேதி பெரியார் சிலைக்கு மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்துகிறார்: சென்னை மேற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் சிற்றரசு அறிவிப்பு

சென்னை 13, செப்டம்பர் 2026: பெரியாரின் 148வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை அண்ணா சாலையில் உள்ள அவரது உருவ சிலைக்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவிக்கிறார் என சென்னை மேற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் சிற்றரசு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பு: பெரியாரின் 148வது பிறந்த நாளை முன்னிட்டு வரும் 17ம் தேதி காலை 8.30 மணிக்கு சென்னை அண்ணா சாலை, சிம்சன் அருகே உள்ள அவரது உருவ சிலைக்கு திமுக தலைவர் மு.க. ஸ்டாலின், பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் முதன்மை செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

எனவே முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், தலைமை கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற




உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதி திராவிடர் நலக் குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச் சூழல் அணி, அயலக அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல். அ.தி.மு.க., தி.மு.க.வுக்கு டெபாசிட் கிடைக்காது. அமைச்சர் நிர்மல்குமார் பேட்டி

சென்னை 13, செப்டம்பர் 2026: ஸ்டாலின் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவில்லை. வேறு ஏதோ ஒரு சில காரணங்களுக்காக அவர் கைது செய்யப்பட்டார் என்று அமைச்சர் நிர்மல்குமார் மீண்டும் உறுதிபட கூறியுள்ளார்.

மதுரையில் அமைச்சர் நிர்மல்குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகத்திற்கு வரும் மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு இல்லாத அளவிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. சிசிடிவி கேமராக்கள் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட உள்ளது.

மிசாவில் ஸ்டாலின் கைதாகவில்லை என்று எல்லோரும் சொல்கிறார்கள் ஸ்டாலின் மிசாவில் கைது செய்யப்பட்டதற்கு ஆதாரம் இருக்கிறதா; கைதான எல்லோரும் ஆதாரம் வைத்து இருக்கிறார்கள். ஒருவர் கைது ஆகியிருந்தால் டிடென்ஷன் காப்பி காட்ட வேண்டும்; டிடென்ஷன் காப்பி இல்லாத ஒரே தியாகி இவராக தான் இருப்பார் போல. இவரை நீங்கள் திரும்ப, திரும்ப தியாகியாக ப்ரொஜெக்ட் பண்றதுனால ஒரு பிரயோஜனமும் இல்லை. ஸ்டாலின் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை. வேற ஏதோ ஒரு சில காரணங்களுக்காக கைது செய்யப்பட்டார் என்பது 30வருடம், 40 வருடம் சர்ச்சை. இதுவரைக்கும் அவர்களால் ஒரு டிடென்ஷன் காப்பி கூட கொடுக்க முடியவில்லை.

இவ்வளவு பெரிய தியாகி கைது செய்யப்பட்டார் என்றால் எதுக்கு டிடென்ஷன் காப்பி அழிக்கப்பட்டது. எல்லோரும் சொல்கிற குற்றச்சாட்டு 1989ல் அவர் ஆட்சி காலம் வந்த பிறகு அதற்கான ஆதாரங்கள் எதுவும் கிடைக்க கூடாது என்று அழித்து விட்டார்கள் என்று சொல்கிறாங்க. மிசாவில் கைது செய்யப்பட்ட எல்லோருக்கும் ஆதாரம் இருக்கிறது; ஸ்டாலினுக்கு மட்டும் ஆதாரம் இல்லை. சட்டசபையில் அவர்கள் நடந்து கொண்ட விதத்தை பார்த்து அனைவரும் சிரிக்கின்றனர்.

இரண்டு இடைத் தேர்தலில் திருமங்கலம் பார்முல்லா போல் எத்தனை 100 கோடி ரூபாய் கொண்டு வந்தாலும் மக்கள் அதை வாங்கிட்டு, என்ன செய்ய வேண்டுமோ, அதை தெளிவாக செய்வார்கள். அதில் எந்த மாற்றுக்கருத்தும் கிடையாது. இவர்கள் எல்லாம் எங்கே இருந்து கொள்ளை அடித்தார்கள்; எத்தனை லட்சம் கோடி ரூபாய் தமிழகத்தில் இருந்து கொள்ளை அடித்தார்கள்.

அத்தனை லட்சம் கோடி ரூபாயில் இருந்து இன்றைக்கு 100 கோடி ரூபாய், 200 கோடி ரூபாயை வைத்து கொண்டு ஒவ்வொரு இடைத்தேர்தலுக்கும் வருவார்கள். இவர்களை எப்படி சமாளிக்க வேண்டும் என்று மக்களுக்கு தெரியும்.

மதுராந்தகம் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட எழும்பூரை சேர்ந்த பரந்தாமனை நியமிப்பதால் என்ன பயன்? இடைத் தேர்தலில் திமுகவுக்கும், அண்ணா தி.மு.க. வுக்கும் டெபாசிட் கூட கிடைக்காது, அது நல்லா தெரியும். மக்கள் அவர்களை தமிழகத்தில் இருந்து தூக்கி எறிந்து ரொம்ப நாள் ஆகிவிட்டது. திமுக நடத்தும் போராட்டத்தை பார்த்து மக்கள் சிரித்தவாறே கடந்து செல்வர். இவ்வாறு அமைச்சர் கூறினார்.

## “உணர்வுகளுக்கு முக்கியத்துவம் உள்ள கதாபாத்திரத்தில் நடிப்பது என்னைப் போன்ற வளர்ந்து வரும் கலைஞருக்கு கிடைத்த வரம்”... ‘என்ன விலை’ திரைப்படம் குறித்து நடிகை விஜயலட்சுமி வீரமணி!

சென்னை 13, செப்டம்பர் 2026: தமிழ் சினிமா மற்றும் தொலைக்காட்சியில் துணை மற்றும் குணச்சித்திர கதாபாத்திரங்களில் தனது திறமையான நடிப்பின் மூலம் தனக்கென ஒரு இடத்தை உருவாக்கி வருபவர் நடிகை விஜயலட்சுமி வீரமணி. ‘மாவீரன்’, ‘செம்பி’, ‘கஜானா’ உள்ளிட்ட திரைப்படங்களிலும், ‘ஆபீஸ்’ தொடரிலும் தனது நடிப்பின் மூலம் கவனம் ஈர்த்துள்ளார்.

தொடர்ந்து வித்தியாசமான கதாபாத்திரங்களைத் தேர்வு செய்து வரும் விஜயலட்சுமி வீரமணி, தற்போது சஜீவ் பழூர் எழுதி இயக்கியுள்ள ‘என்ன விலை’ திரைப்படத்தில் முக்கியத்துவம் வாய்ந்த, உணர்வுப்பூர்வமான பாலம்மா என்ற ஹுதாபாத்திரத்தில் நடித்துள்ளார். ஏற்கனவே வெளியாகியுள்ள இப்படத்தின் டிரெய்லரில் விஜயலட்சுமி கதாபாத்திரத்தின் அழுத்தமான தன்மையையும், இதுவரை அவர் ஏற்று நடித்திராத மாறுபட்ட உணர்வுப்பூர்வமான நடிப்பையும் பார்க்க முடிகிறது. செப்டம்பர் 17ஆம் தேதி திரைப்படம் வெளியாக உள்ள நிலையில், இப்படத்தில் முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்த அனுபவம் பற்றி நடிகை விஜயலட்சுமி வீரமணி பகிர்ந்துள்ளார்.

நடிகை விஜயலட்சுமி வீரமணி பகிர்ந்து கொண்டதாவது, “உணர்வுகளுக்கு முக்கியத்துவம் உள்ள ஒரு கதாபாத்திரத்தில் நடிக்க வாய்ப்பு கிடைப்பது என்னைப் போன்ற வளர்ந்து வரும் நடிகருக்கு கிடைத்த வரம். உணர்வுப்பூர்வமான கதாபாத்திரங்களை ஏற்று நடிப்பதற்கான வாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்று நான் எப்போதும் கனவு கண்டிருக்கிறேன். ‘என்ன விலை’ படத்தின் மூலம், இதுவரை ரசிகர்கள் பார்த்திராத என்னுடைய நடிப்பின் மற்றொரு பரிமாணத்தை வெளிப்படுத்தக் கூடிய தனித்துவமான கதாபாத்திரம் கிடைத்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.



பாலம்மா கதாபாத்திரம் ஒரு நடிகையாக என்னிடம் நிறைய எதிர்பார்த்தது. மிகச் சிறந்த கலைஞரான கருணாஸ் அவர்களுடன் இணைந்து பணியாற்றியது மிகச் சிறந்த அனுபவமாக இருந்தது. இத்தனை ஆண்டுகளாக திரைத்துறையில் பயணித்து வரும் அவரைப் போன்ற ஒரு கலைஞர், என்னுடைய நடிப்பை ஊக்குவித்து பாராட்டியது எனக்கு மறக்க முடியாத தருணமாக அமைந்தது. நிமிஷா சஜயன் என்னைப் போன்ற கலைஞர்களுக்கு மிகப்பெரிய இன்ஸ்பிரேஷன். அவருடன் நடித்திருப்பது மகிழ்ச்சி” என்றார்.

இப்படத்தில் கருணாஸ், நிமிஷா சஜயன், விஜயலட்சுமி வீரமணி, சாஷா, சித்தா தர்ஷன், பூர்ணிமா பாக்யராஜ், ஒய்.ஜி. மகேந்திரன், மொட்ட ராஜேந்திரன், நிழல்கள் ரவி, பிரவீணா, மோகன் ராம், சேத்தன் குமார், கவிதாலயா கிருஷ்ணன், கமலேஷ், கோலி சோடா பாண்டி, ஜே.எஸ். கவி, சுவாமிநாதன், தீபா சங்கர், கவி நக்கலைட்ஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

சஜீவ் பழூர் எழுதி இயக்கியுள்ள இப்படத்தை கலாமயா பிலிம்ஸ் நிறுவனத்தின் சார்பில் ஜிதேஷ் வி தயாரித்துள்ளார். படத்தின் தொழில்நுட்பக் குழுவில் இசையமைப்பாளர் சாம் சி.எஸ்., ஒளிப்பதிவாளர் ஆல்பி ஆண்டனி மற்றும் படத்தொகுப்பாளர் ஸ்ரீஜித் சாரங் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். சமூக முக்கியத்துவம் வாய்ந்த கதைக்களத்துடன் உருவாகியுள்ள ‘என்ன விலை’, செப்டம்பர் 17, அன்று திரையரங்குகளில் வெளியாகிறது.

## இயக்குநர் கார்த்திக் சுப்புராஜின் ‘டோரதி’ திரைப்படம் டிஐஎஃப்எஃப் திரைப்பட விழாவில் உலகளவில் முதல் முறையாகத் திரையிடப்பட்டது!

சென்னை 13, செப்டம்பர் 2026: கார்த்திக் சுப்புராஜ் எழுதி இயக்கியுள்ள தமிழ் திரைப்படமான ‘டோரதி’, 2026 ஆம் ஆண்டு டொராண்டோ சர்வதேச திரைப்பட விழாவில் (டிஐஎஃப்எஃப்) உலகளவில் முதல் முறையாகத் திரையிடப்பட்டது. உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த திரைப்படங்களும், சர்வதேச அளவில் பாராட்டுப் பெற்ற படங்களும் இடம் பெறும் பிரபலமான ‘சென்டர்பீஸ்’ பிரிவில் இப்படம் திரையிடப்பட்டது. ஜியோ ஸ்டுடியோஸ் வழங்கும் இப்படத்தை, தம்மம் ஃபிலிம்ஸ் நிறுவனத்துடன் இணைந்து சிக்யா என்டர்டெயின்மென்ட் தயாரித்துள்ளது. கடந்த பத்தாண்டுகளில் டிஐஎஃப்எஃப் திரைப்பட விழாவில் உலகளவில் முதல் முறையாகத் திரையிடப்படும் முதல் இந்தியத் தமிழ் திரைப்படம் என்ற பெருமையை ‘டோரதி’ பெற்றுள்ளது. உலகளவில் முதல் முறையாகத் திரையிடப்பட்ட போது இப்படத்திற்கு பார்வையாளர்கள் எழுந்து நின்று பாராட்டுத் தெரிவித்தனர்.

டொராண்டோவில் உள்ள ஸ்காட்டியா பேங்க் திரையரங்கில் நடைபெற்ற இப்படத்தின் முதல் காட்சியில், இயக்குநர் கார்த்திக் சுப்புராஜுடன் நடிகர்கள் கீர்த்தி சுரேஷ், சனந்த் மற்றும் ரிஷிகாந்த் ஆகியோர் கலந்து கொண்டனர். தயாரிப்பாளர்கள் குணீத் மோங்கா கபூர் மற்றும் அச்சின் ஜெயினும் நிகழ்வில் பங்கேற்றனர்.



இது குறித்து இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ் பகிர்ந்து கொண்டதாவது, “நான் நெருக்கமாக அறிந்த ஒரு இடத்திலிருந்தும், கலாச்சாரத்திலிருந்தும் உருவான கதைதான் ‘டோரதி’. ஆனால், இப்படம் எழுப்பும் நட்பு, பாரபட்சம் மற்றும் மனிதர்களுக்கு இடையிலான தொடர்பு குறித்த கேள்விகள் உலகளாவிய பார்வையாளர்களுக்கும் பொருந்தும். டிஐஎஃப்எஃப் திரைப்பட விழாவில் இப்படம் உலகளவில் முதல் முறையாகத் திரையிடப்படுவது எனக்கு ரொம்பவே ஸ்பெஷல். நான் சொல்ல விரும்பிய கதையின் உண்மைத் தன்மையை அப்படியே உலகம் முழுவதும் உள்ள பார்வையாளர்களிடம் கொண்டு செல்லும் வாய்ப்பை இது கொடுத்துள்ளது.

கார்த்திக் சுப்புராஜ் எழுதி இயக்கியுள்ள ‘டோரதி’ திரைப்படத்தில் சனந்த், ரிஷிகாந்த் மற்றும் கீர்த்தி சுரேஷ் ஆகியோர் முதன்மை கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படம் செப்டம்பர் 25, 2026 அன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது. ஜோதி தேஷ்பாண்டே, குணீத் மோங்கா கபூர் மற்றும் அச்சின் ஜெயின் ஆகியோர் தயாரித்துள்ள இப்படம், தம்மம் ஃபிலிம்ஸ் நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது. ஜியோ ஸ்டுடியோஸ் மற்றும் சிக்யா என்டர்டெயின்மென்ட் இப்படத்தை வழங்குகின்றன.

## அரசியலும், சமூக அக்கறையும் சேர்ந்து உருவாகியுள்ள படம் “ஆகாயம்” தினந்தோறும் நாகராஜ் இயக்கியுள்ளார்

சென்னை 13, செப்டம்பர் 2026: "தினந்தோறும்" திரைப்படத்தின் மூலம் கவனம் பெற்ற இயக்குநர் தினந்தோறும் நாகராஜ், அதன் மாபெரும் வெற்றிக்குப் பிறகு ரசிகர்களாலும், திரையுலகினராலும் அந்தப் பெயரிலேயே அன்புடன் அழைக்கப்பட்டார். தொடர்ந்து இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனன் இயக்கிய "மின்னலே", "காக்க காக்க" போன்ற வெற்றிப் படங்கள் உட்பட பல படங்களுக்கு திரைக்கதை, வசனம் எழுதி பணியாற்றினார் என்பது குறிப்பிடதக்கது.

அவர் தற்போது "ஆகாயம்" திரைப்படத்தை கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியுள்ளார்.

"கன்னி மாடம்" திரைப்படத்தின் மூலம் தனது இயல்பான நடிப்பால் அனைவரின் கவனம் ஈர்த்த ஸ்ரீராம் கார்த்திக் இப்படத்தின் கதாநாயகனாக நடித்துள்ளார். கதாநாயகியாக ஆலிஷா மிராணி அறிமுகமாகிறார்.

மேலும் ஷீலா, கனிகா, சந்தான பாரதி, ஜெயபிரகாஷ், கிரி துவாரகிஷ், ஸ்ரீ தேவ கிருஷ்ணன், "மெய்யழகன்" படத்தில் நடித்த இந்துமதி மணிகண்டன், தீபா, "மகாராஜா" திரைப்படத்தில் நடித்ததற்காக தேசிய விருது பெற்ற சஞ்சனா நமீதாஸ், ரோசாரி, ரைட்டர் ஹரிஹரன் ஞள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

"ஒரு நொடி", "ஜென்ம நட்சத்திரம்" ஆகிய படங்களுக்கு படத்தொகுப்பு செய்த சூர்யா, இப்படத்தின் எடிட்டிங்கை மேற்கொண்டுள்ளார்.

சண்டைப் பயிற்சியை பையர் கார்த்திக் அமைத்துள்ளார்.



நடன அமைப்பாளராக மணிகண்டன் பணியாற்றுகிறார்.

மக்கள் தொடர்பு : புவன் செல்வராஜ்

தயாரிப்பு மேற்பார்வை : பிரசாந்த்

தயாரிப்பு : ஜெயச்சந்திரன் கார்த்திகா தேவி

கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியுள்ளார் - தினந்தோறும் நாகராஜ்.

படம் பற்றி இயக்குனர் தினம்தோறும் நாகராஜ் பகிர்ந்தவை...

"கதையாகச் சொன்னால் 'ஆகாயம்' குடிக்கு எதிரான படம். ஆனால், அதை உயிர்த்துடிப்பான ஒரு வாழ்க்கையோடு சொல்லியிருக்கிறேன். தவிர இதில் அரசியலும், சமூக அக்கறையும் சேர்ந்திருக்கின்றன. படங்கள் அனுபவங்களைத் தந்து, வாழ்க்கைக்குள் நுழைந்து நல் உணர்வுகளைத் தர வேண்டும். அப்படி ஒரு சினிமா செய்வதுதான் நமக்கு கௌரவம். நான் அதைத்தான் செய்திருக்கிறேன். 'ஆகாயம்' அப்படியான படம். ஒரு நல்ல நடைமுறை வாழ்க்கையைப் பாசத்தோடும் பரிதவிப்போடும் சொல்லியிருக்கிறேன் என்றார் இயக்குனர் தினந்தோறும் நாகராஜ்.

விரைவில் திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

## “ரசிகர்களின் எதிர்பார்ப்பை எகிறவைக்கும் கிரைம் த்ரில்லர்...” : ‘பீப்’ படம் குறித்து மனம் திறந்த நடிகர் ராகவ்!

சென்னை 13, செப்டம்பர் 2026: 'எந்திரன்', 'நஞ்சுபுரம்', 'வேலாயுதம்', 'கல்யாண சமையல் சாதம்' உள்ளிட்ட படங்களில் மிக முக்கியமான கதாபாத்திரங்களில் நடித்து கவனம் ஈர்த்தவர் நடிகர் ராகவ். இவரது நடிப்பில் அடுத்ததாக 'பீப்' திரைப்படம் வெளியாக இருக்கிறது.

இயக்குநர் இல. சண்முகசுந்தர் இயக்கியுள்ள இப்படம் ஒரு கிரைம் திரில்லர் ஆக உருவாகி இருக்கிறது. படம் விரைவில் வெளியாக இருக்கும் நிலையில் படம் குறித்தும், படத்தில் நடித்த அனுபவம் குறித்தும் பகிர்ந்து கொண்டார் நடிகர் ராகவ்.

“நாம் ஒரு விஷயம் கேட்க வேண்டாம் அல்லது கேட்கக் கூடாது என அதை கட் பண்ண நினைத்தால் அந்த இடத்தில் ஒரு 'பீப்' போடுகிறோம் அதாவது துண்டிக்கப்பட்ட குரல்கள் என்று சொல்வார்களே அது போல சொல்லப்படாதவை என்று இந்த 'பீப்' டைட்டிலுக்கு அர்த்தம் எடுத்துக் கொள்ளலாம்.

அந்த வகையில் வழக்கமாக நிறைய சொல்லப்படாத விஷயங்களை இந்த படத்தில் தொட்டிருக்கிறோம். அதாவது படம் பார்ப்பவர்களின் ஹுதிர்பார்ப்பை குறி வைக்கும் ஒரு க்ரைம் திரில்லர் என்று சொன்னால் சரியாக இருக்கும்.

படத்தின் ஹீரோவுக்கு ஒரு சூப்பர் பவர் இருக்கு என்றாலும் அவர் சூப்பர் மேன் கிடையாது. நான்கு டிஜிட் பெருக்கல் கணக்கைக் கூட சிலர் உடனடியாக விடை சொல்கிறார்களே.. அது போல இந்த ஹீரோவுக்கும் ஒருவிதமான சூப்பர் பவர் இருக்கு. அதேசமயம் சூப்பர் பவர் என்பது நார்மலான ரியல் லைஃப்பில் இருந்தால் எப்படி இருக்கும் என்பதை தான் இதில் அழகாக உருவாக்கி இருக்கிறோம். என்னுடைய கதாபாத்திரத்தின்



மேனரிசம் எதுவுமே எனது சொந்த உருவாக்கம் இல்லை. அந்த கதாபாத்திரத்திற்கு இயக்குநர் உருவாக்கியதை நான் வெளிப்படுத்தி இருக்கிறேன். படத்தை பார்த்த என் மனைவியே உன்னை வேறு மாதிரி காட்டி இருக்கிறார் இயக்குநர் என்று ஆச்சரியப்பட்டார்.

இரண்டு பாடல்கள் தான் படத்தில் இருக்கிறது ஆனால் ஒரு க்ரைம் திரில்லர் என்பதால் இசையமைப்பாளர் பிரசாந்த் விஹாரியின் பின்னணி இசை படத்திற்கு ஒரு ஆன்மாவாக அமைந்திருக்கிறது. ஒரு க்ரைம் த்ரில்லர் என்கிறபோது படம் பார்க்கும் ரசிகர்களும் அவர்களே கதைக்குள் இறங்கி சில விஷயங்களை கணக்கு போட்டு கண்டுபிடிப்பது போன்ற ஒரு சுவாரசியம் இந்த படத்தில் இருக்கிறது. தனி ஒருவன் படத்தில் அரவிந்த்சாமி செய்தது போல ஒரு வில்லன் கதாபாத்திரத்தில் நடிக்க ரொம்ப நாளாக ஆசை.. இது தவிர நானும் சொந்தமாக சில ஸ்கிரிப்ட்டுகள் எழுதி வைத்திருக்கிறேன்.. அதை எல்லாம் எடுக்க வேண்டும் என்கிற ஆசையும் இருக்கிறது” என்று கூறினார் ராகவ்..

*தொழில்நுட்பக் கலைஞர்கள் விவரம்*

இயக்கம் ; இல. சண்முக சுந்தர், இசை ; பிரசாந்த் விஹாரி ஒளிப்பதிவு ; பிரதீப் பத்மகுமார் படத்தொகுப்பு ; அபிஷேக் மற்றும் விக்னேஷ் ஆக்சன் காட்சிகள் ; ராம்குமார், மக்கள் தொடர்பு ; ஏ.ஜான்